யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre
## தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
## Term Examination, March - 2016

| தரம் :- 13 (2016) | கணக்கீடு – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:-**
- முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட ஆறு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ஒவ்வொரு விடையும் புதிய தாளில் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்.
- ஒவ்வொரு பொருத்தமான செய்முறைகள் விடைகளுடன் இணைக்கப்படல் வேண்டும்.

01) மாதீஸ் தனியார் கம்பனி 31.03.2016 இல் பின்வரும் பரீட்சை மீதியை வெளிப்படுத்தியது.

| விபரம் | வரவு ரூபா "000" | செலவு ரூபா "000" |
|---|---|---|
| விற்பனை | | 7500 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயம் | 10500 | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணத்துக்கான பெறுமானத்தேய்வு ஏற்பாடு | | 2200 |
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் (400,000 பங்குகள்) | | 6000 |
| முதலீடு | 1200 | |
| விற்பனைக் கிரயம் | 3000 | |
| இருப்பு (தேறிய நிகரப் பெறுமதி) | 280 | |
| வியாபாரக் கடன் கொடுத்தோன் | | 1600 |
| 12% தொகுதிக்கடன் | | 500 |
| ஏனைய வருமானம் | | 300 |
| குத்தகைக் கடன் கொடுத்தோன் | | 450 |
| செலுத்திய பங்குலாபம் | 110 | |
| நிலையான வைப்பு | 2000 | |
| செலவுகள் | 1300 | |
| காசு | 620 | |
| 01.04.2015 ல் ஐயக்கடன் ஏற்பாடு | | 60 |
| வியாபாரக் கடன்பட்டோன் | 1390 | |
| 01.04.2015 ல் நிறுத்தி வைத்த இலாபம் | | 790 |
| பொது ஒதுக்கம் | | 1000 |
| | 20400 | 20400 |

**மேலதிக தகவல்கள்**

1) பரீட்சை மீதியில் உள்ளடக்கப்பட்ட செலவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது.

| செலவுவகை | ரூபா '000' |
|---|---|
| விநியோக செலவு | 430 |
| நிர்வாகச் செலவு | 480 |
| ஏனைய செலவு | 390 |
| | 1300 |

2) விநியோகச் செலவு விற்பனை உத்தரவாதத் தரகுக்கான கொடுப்பனவு ரூபா 150,000 ஐ உள்ளடக்கியுள்ளது. விற்பனை உத்தரவாத தரகு வருடாந்த விற்பனையில் 2% ஆக மதிப்பிடப்படுகின்றது. பதிவுசெய்யப்படாத விற்பனைப் பட்டியல் ரூபா 600,000

3) நிர்வாக செலவு காப்புறுதிக்கான கொடுப்பனவு ரூபா 180,000 ஐ உள்ளடக்கியுள்ளது. இது 31.08.2016 ல் முடிவடையும் ஆண்டுக்கானது

4) இருப்பின் கிரயம் 31.03.2016 ல் ரூபா 300,000 இவ்விருப்பு சந்தையில் ரூபா 40,000 செலவு செய்த பின்னர் ரூபா 280,000 ற்கு விற்பனை செய்ய முடியும். ஆனால் விற்பனை கிரய கணிப்பீட்டிற்கு விற்பனைப் பெறுமதியே கவனத்தில் கொள்ளப்பட்டது.

5) 01.04.2015 ல் உபகரணம் நிதிக்குத்தகையின் அடிப்படையில் ரூபா 450,000 நியாயமான விலையில் கொள்வனவு செய்யப்பட்டதும் பதிவும் சரியாக மேற்கொள்ளப்பட்டது. வருடாந்த குத்தகை தவணைக்கட்டணம் ரூபா 100,000. இதில் நிலையான வட்டிவீதம் ரூபா 25000 ஆகும். குத்தகை காலம் 6 வருடங்கள். 1வது தவணைக்கட்டணம் 31.03.2016 ல் செலுத்தப்பட்டது. இது ஏனைய செலவினுள் உள்ளடக்கப்பட்டது. வேறு எதுவித பதிவுகளும் இடம்பெறவில்லை.

6) ஆதனம் பொறியானது 01.01.2016 ல் மீள் மதிப்பிடப்பட்ட காணியின் பெறுமதி ரூபா 4300,000 ஐ உள்ளடக்கியுள்ளது. காணி மீள்மதிப்பீட்டு லாபம் ரூபா 300,000 ஏனைய வருமானமாக காட்டப்பட்டுள்ளது. இக்காணி 31.03.2015 ல் மீள்மதிப்பீட்டு நட்டம் ரூபா 200,000 ஐ வருமானக்கூற்றில் பதிவிடப்பட்டிருந்தது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் காணி நீங்கலாக, மோட்டார் வாகனம் 4500,000 ஐயும் மிகுதி உபகரணத்தையும் உள்ளடக்கியுள்ளது. மோட்டார் வாகனம் 01.10.2015 ல் ரூபா 4000,000 ற்கு பகுதி மாற்றம் செய்யப்பட்டு புதிய மோட்டார் வாகனம் கொள்வனவு செய்யப்பட்டது. இது தொடர்பான எப்பதிவும் செய்யப்படவில்லை. பகுதி மாற்றப்பட்ட மோட்டார் வாகனம் 01.04.2013ல் கொள்வனவு செய்யப்பட்டது. ஆதனம், பொறி மற்றும் உபகரணம் கிரயத்தில் 10% தேய்விடப்படுகின்றது.

7) விநியோகத்தர்களுக்கு கொடுத்த காசு ரூபா 200,000 ஆனால் கொள்வனவாக பதியப்பட்டுள்ளது. இது கவனத்தில் கொள்ளப்படவில்லை.

8) கடன்பட்டோரில் ரூபா 150,000 ஐ அறவிட முடியாக் கடனாக பதிவழிக்குக. மேலும் எஞ்சிய கடன்பட்டோரில் 10% ஐயக்கடன் ஏற்பாட்டினை மேற்கொள்க.

9) 31.03.2016ல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான வரி ரூபா 170,000 என மதிப்பிடப்பட்டது. 31.03.2016ல் முடிவடைந்த ஆண்டிற்காக செலுத்திய வருமான வரி ரூபா 120,000. இது ஏனைய செலவினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

10) தீயழிவு நட்டம் தொடர்பாக ஊழியர் வழக்கு ஒன்றினை தாக்கல் செய்திருந்தனர். கம்பனி நட்ட இழப்பீடு ஆக 120,000 வழங்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**வேண்டப்படுவது**

i) 31.03.2016 ல் முடிவடைந்த ஆண்டுக்கான முற்றுமடங்கிய வருமானக்கூற்று

ii) 31.03.2016 ல் உள்ளவாறான நிதி நிலபரக்கூற்று

iii) பொருத்தமான குறிப்புக்களும் வெளிப்படுத்தல்களும்

(மொத்தம் 20 புள்ளிகள்)

02) அ) ஜோனாவும், சுபாவும் பங்குடமையொன்றின் மூலதனத்தில் 10% நிலையான வட்டி வீதத்தை பெறும் பங்காளர்களாவர். சுபா வருடாந்த சம்பளமாக ரூபா 20,000 ஐ பெறுகின்றார். இலாபநட்ட விகிதம் சமமாக பங்கிடப்படுகின்றது.

சனா இப்பங்குடமையின் ஊழியர் ஆகும். இவர் பங்குடமைக்கு 10% வட்டியில் கடன் ஒன்றை வழங்கியுள்ளார். 01.04.2015 ல் இருந்து பின்வரும் நிபந்தனைகளுடன் புதிய பங்காளனாக சேர்க்கப்பட்டார்.

- ✶ 01.04.2015 ல் இருந்து கடன் மூலதனமாக்கப்படும்.
- ✶ சனா ரூபா 120,000 பெறுமதியான கனணியினை மூலதனமாக கொண்டு வரவேண்டும்.
- ✶ நன்மதிப்பு ரூபா 150,000 ஆக மதிப்பிடப்பட்டு மூலதனக் கணக்கினூடாக பதிவழிப்பு செய்யப்பட வேண்டும்.
- ✶ சனாவிற்கு லாப பங்கு $\frac{2}{5}$ வழங்கப்படும்.
- ✶ ஒவ்வொரு பங்காளனும் மாதாந்தம் ரூபா 1500/= பெற உரிமையுடையவர்
- ✶ பொது ஒதுக்கத்திற்கு வருடாந்தம் ரூபா 14000 மாற்றப்படும்.
- ✶ நன்மதிப்பு சீராக்கத்தின் பின்பு பங்காளர்கள் தமது மூலதன மீதியை லாபநட்ட விகிதப்படி பேணுவது என தீர்மானித்தனர். சீராக்கங்கள் பங்காளர் நடைமுறைக் கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

முடிவுக்கணக்குகள் பழைய நிபந்தனைகளின் அடிப்படையில் 31.03.2016 ல் பின்வருமாறு தயாரிக்கப்பட்டது.

1. ஊழியர் சனாவுக்கு ரூபா 15000/= சம்பளம் வழங்கப்பட்டது பதியப்பட்டது.
2. 31.07.2016 ல் முடிவடைந்த ஆண்டிற்காக கொடுக்கப்பட்ட காப்புறுதி ரூபா 12,000. ஆனால் ரூபா 4000 அட்டுறு செலவினமாக வருமானக்கூற்றில் பதியப்பட்டுள்ளது.
3. கடனுக்கான வட்டி ரூபா 6000 வருமானக்கூற்றில் பதியப்பட்டுள்ளது.
4. லாபப்பகிர்வின் பின்னர் 31.03.2016 ல் பங்காளர்கள் ஜோனா, சுபா பங்குடமையின் நடைமுறைக்கணக்கு

| விபரம் | ஜோனா | சுபா | விபரம் | ஜோனா | சுபா |
|---|---|---|---|---|---|
| மீதி | – | 5,000 | மீதி | 20,000 | |
| பற்று | 30,000 | 17,000 | மூலதனவட்டி | 4,500 | 7,500 |
| சம்பளம் | – | 10,000 | சம்பளம் | | 20,000 |
| மீதி | 22,000 | 18,000 | விளம்பரம் | 5,000 | |
| | | | லாபம் | 22,500 | 22,500 |
| | 52,000 | 50,000 | | 52,000 | 50,000 |
| | | | மீதி | 22,000 | 18,000 |

5. ஜோனாவினுடைய பற்றானது முகாமை செயலமர்வுக்கு சென்ற போக்குவரத்து கட்டணத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 6000 இனை உள்ளடக்கியுள்ளது.
6. சனாவால் கணனி கொண்டு வரப்பட்டது. இதன் பெறுமானத் தேய்வு கிரயத்தில் 10% ஆனால் கவனத்தில் கொள்ளப்படவில்லை.
7. சனா ரூபா 10,000 கிரயமான பொருட்களை பற்றியிருந்தார். கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

8. 31.03.2016 ல் ஜோனா, சுபா வினுடைய மீதிகள் வருமாறு

| | மொத்த உரிமையாண்மை |
|---|---|
| ஜோனா | ரூபா 67000 |
| சுபா | ரூபா 93000 |

**வேண்டப்படுவது**

i) 31.03.2016 ல் முடிவடைந்த ஆண்டுக்கான
   1) பகிர்வு கூற்று   2) இலாப சீராக்கக் கூற்று

ii) 31.03.2016 ல் பங்காளர் நடைமுறைக் கணக்கு, பங்காளர் மூலதனக் கணக்கு

(12 புள்ளிகள்)

ஆ) வரையறுத்த மயூரி கம்பனி புதிய பிளாஸ்டிக் $T$ கோப்பைகளை உற்பத்தி செய்கின்றது. 31.03.2016 ல் பின்வரும் தகவல்கள் தரப்படுகின்றது.

I) கம்பனி இரண்டு உற்பத்தி திணைக்களங்களையும், சேவைத் திணைக்களத்தையும் கொண்டுள்ளது.

| விபரம் | உருக்குதல் திணைக்களம் | வடிவமைத்தல் திணைக்களம் | பராமரிப்பு திணைக்களம் |
|---|---|---|---|
| நேரில் சம்பளம் | 500,000 | 300,000 | 100,000 |
| நேரில் கூலி | 250,000 | 100,000 | 50,000 |
| தளப்பரப்பு (சதுர $km$) | 10,000 | 5,000 | 5,000 |
| ஊழியர் எண்ணிக்கை | 100 | 80 | 70 |
| இயந்திரம் கிரயம் | 500,000 | 400,000 | − |
| கட்டிடம் - கிரயம் | 1000,000 | 800,000 | 200,000 |
| ஊழிய மணித்தியாலம் | 10,000 $hr$ | 5,000 $hr$ | |

II) குறித்த காலப்பகுதிக்கான பாதிடப்பட்ட பெறுமேந்தலைகள்

| | |
|---|---|
| ஊழியர் போக்குவரத்து | 36,000 |
| மின்சாரம் | 100,000 |
| நலன்புரி செலவு | 25,000 |
| கட்டிட பெறுமானத்தேய்வு | 40,000 |
| கட்டிட காப்புறுதி | 20,000 |
| இயந்திர பெறுமானத் தேய்வு | 18,000 |

**மேலதிக தகவல்கள்**

1) சேவைத்திணைக்களத்தில் பங்களிப்பு சமபங்காக உற்பத்தித் திணைக்களத்திற்கு வழங்கப்படுகின்றது.
2) ஊழியர் போக்குவரத்து உருக்குதல், பராமரிப்பு திணைக்கள ஊழியர்கள் மாத்திரம் பயன்படுத்துகின்றனர்.
3) மேந்தலையானது ஊழிய மணித்தியால அடிப்படையில் உறிஞ்சப்படுகிறது.
4) ஓர் அலகு உற்பத்தி தொடர்பான தகவல்கள் வருமாறு

   மூலப்பொருள் 50/=

   நேர்கூலி 15/=

   மேந்தலை உருக்குதல் திணைக்களம் 1 மணித்தியாலம்

   வடிவமைத்தல் திணைக்களம் $\frac{1}{2}$ மணித்தியாலம்

5) கம்பனி விற்பனை விலையினை கிரயத்தில் 25% லாபம் சேர்த்து தீர்மானிக்கின்றது.

**வேண்டப்படுவது**

I) மேந்தலை பகிர்வு கூற்று

II) ஓர் அலகுக்கான கிரயம்

III) ஓர் அலகுக்கான விற்பனை விலை

(8 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03) வேலு கம்பனியின் 31.03.2015, 31.03.2016 ல் உள்ளவாறான சுருக்கப்பட்ட நிதி நிலபரக்கூற்றுகள் வருமாறு

| விபரம் | 31.03.2016 ரூபா "000" | 31.03.2015 ரூபா "000" |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயம் | 18000 | 14000 |
| பெறுமானத்தேய்வு ஏற்பாடு | (4000) | (3000) |
| இருப்பு | 2000 | 1500 |
| கடன்பட்டோர் | 1500 | 1300 |
| காசும் காசுக்கு சமனானவையும் | 500 | 700 |
| மொத்த சொத்துக்கள் | 18000 | 14500 |
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | 9000 | 8000 |
| நிறுத்தி வைத்த லாபம் | 5000 | 4000 |
| மீள் மதிப்பு மிகை | 500 | |
| நிலத்திற்கான கடன் | 2000 | – |
| கடன்கொடுநர் | 1300 | 2500 |
| கடனுக்கான சென்மதி வட்டி | 200 | – |
| | 18000 | 14500 |

**மேலதிக தகவல்கள்**

1) ஆதனம் ரூபா 1500,000 கிரயமுடையது. ரூபா 500,000 இற்கு நிதியாண்டில் விற்பனை செய்யப்பட்டது. விற்பனை செய்த திகதியில் சொத்தின் புத்தகப் பெறுமதி ரூபா 800,000/=
2) பொறி 01.04.2015 ல் ரூபா 3000,000 இற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. இதன் கிரயம் ரூபா 2500,000 இத் திகதி வரை இது பாவனைக்கு உட்படுத்தவில்லை. ஏனைய கொள்வனவுகள் நிதியாண்டில் காசுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.
3) இடைக்கால பங்குலாபம் ரூபா 500,000 செலுத்தப்பட்டது.
4) நிறுத்தி வைத்த ஒதுக்கத்தை மூலதனமாக்குவதற்கு ரூபா 500,000 பங்குகள் வழங்கப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது**

I) *LKAS* 7 ன்படி காசுப்பாய்ச்சல் கூற்று

II) ஆதன அகற்றல் கணக்கு

(15 புள்ளிகள்)

04) அ) சுகிர் கம்பனி பின்வரும் மூலப்பொருள் தொடர்பான தகவலை வெளிப்படுத்தியது. கம்பனி *FIFO* முறையை பயன்படுத்துகின்றது.

I)

| திகதி | விபரம் | தொகை (அலகுகளில்) | அலகுக்கான விலை ரூபா |
|---|---|---|---|
| 01.03.2016 | மீதி | 5000 | 10 |
| 05.03.2016 | கொள்வனவு | 4000 | 12 |
| 15.03.2016 | கொள்வனவு | 5000 | 14 |
| 22.03.2016 | கொள்வனவு | 4000 | 15 |

II) வழங்கல் தொடர்பான விபரம்

| திகதி | விபரம் | தொகை (அலகுகளில்) | அலகுக்கான விலை ரூபா |
|---|---|---|---|
| 06.03.2016 | வழங்கல் | 7000 | 30 |
| 18.03.2016 | வழங்கல் | 3000 | 30 |

III) ஏனைய தகவல்கள்

| | கூடியது | குறைந்தது |
|---|---|---|
| நுகர்வு (ஒரு மாதத்துக்கான அலகுகள்) | 4000 | 1000 |
| முதன்மைக் காலம் | 5 | 3 |
| உச்ச இருப்பு மட்டம் | 47000 அலகுகள் | |

**வேண்டப்படுவது**

1) மறு கட்டளை தொகை
2) மார்ச் மாதம் வழங்கிய இருப்புக்களின் கிரயம்
3) மறுகட்டளை மட்டம்
4) மார்ச் மாத இறுதியிருப்பு
5) மார்ச் மாதத்திற்கான மொத்த லாபம் (8 புள்ளிகள்)

ஆ) கபி கம்பனி புதிய வகை $T.shirt$ ஐ உற்பத்தி செய்து வருகின்றது. பின்வரும் தகவல்கள் மார்ச் மாத கடைசி வாரத்துக்கான தகவல்கள் தரப்படுகின்றது.

ஊழியர் - சிந்துராணி - திங்கள் முதல் வியாழன் வரை நாளொன்றுக்கு 08 மணித்தியாலங்கள் வெள்ளிக்கிழமை 10 மணித்தியாலங்களும் வேலை செய்தார்.

ஊழியர் - சறோ திங்கள் முதல் வெள்ளி வரை நாளொன்றுக்கு 05 மணித்தியாலம் சனிக்கிழமை 06 மணித்தியாலம் வேலை செய்திருந்தார்.

ஊழியர் - குறலின் - திங்கள் முதல் வெள்ளிவரை 08 மணித்தியாலம், சனிக்கிழமை 10 மணித்தியாலம் வேலை செய்திருந்தார்.

சேவை நிபந்தனைகள் வருமாறு

1. ஊழியர்கள் திங்கள் முதல் வெள்ளி வரை விடுமுறையில்லாது வேலை செய்வார்களாயின் மேலதிக கொடுப்பனவாக வருகைப்படி ரூபா 1000 பெற்றுக்கொள்வார்.
2. ஊழியர் சேமலாப நிதிக்கு நிறுவனத்தினாலும் ஊழியராலும் முறையே 15%, 10% பங்களிப்பு செய்யப்படுகின்றது. ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு நிறுவனத்தினால் 3% செய்யப்படுகின்றது.
3. குறித்த வாரத்திற்கான கூலிக் கொடுப்பனவு தொடர்ந்து வரும் மாதத்தில் செலுத்தப்படுகின்றது.
4. கூலிக் கணிப்படு
   வாரநாட்களில் வேலை செய்யும் 40 மணித்தியாலத்திற்கு ஒரு மணித்தியாலத்திற்கான கொடுப்பனவு ரூபா 150/=
5. மேலதிக நேரக் கொடுப்பனவு சாதாரண நேரக் கொடுப்பனவின் 150%

**மேலதிக தகவல்கள்**

✶ ஊழியர் குறலின் சம்பளத்தில் இருந்து ரூபா 750 அறவிடப்பட்டு மக்கள் வங்கிக்கு அனுப்பப்படும்.

✶ ஊழியர் சறோவிடம் சம்பள முற்பண அறவீடு ரூபா 1000

**வேண்டப்படுவது**

I) 2016 மார்ச்மாத கடைசி வாரத்திற்கான பொருத்தமான பகுப்பாய்வு நிரல்களுடன் கூடிய சம்பளப் பட்டியல்

II) பொதுப் பேரேட்டில் தேவையான பேரேட்டுக் கணக்குகள்

(7 புள்ளிகள்)
(மொத்தம் 15 புள்ளிகள்)

05) அ) ராஜ் நிறுவனம் தென்னை மரத்தில் இருந்து உற்பத்தி பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனமாகும். 31.03.2016 ல் முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் தகவல்கள் உமக்கு தரப்படுகின்றது. நிறுவனம் FIFO முறையை பின்பற்றுகிறது.

I)

| விபரம் | 31.03.2015 | 31.03.2016 |
|---|---|---|
| | ரூபா "000" | ரூபா "000" |
| மூலப்பொருள் | 40 | 80 |
| குறைவேலை | 15 | 05 |
| முடிவுப் பொருள் | 18 | ? |
| தொழிற்சாலை இயந்திரம் - தேறியது | 175 | 180 |
| மூலப்பொருள் கடன் கொடுநர் | 25 | 30 |

II) 31.03.2016 ல் முடிவடைந்த ஆண்டிற்கான தகவல்கள் வருமாறு

| | ரூபா "000" |
|---|---|
| விற்பனை | 450 |
| நேர்க்கூலி | 7 |
| தொழிற்சாலை மேந்தலை (பெறுமானத்தேய்வு நீங்கலாக) | 50 |
| இயந்திர கொள்வனவு | 25 |
| கடன்கொடுநருக்கு கொடுத்தகாசு | 203 |

III) 01.04.2015 ல் முடிவுப் பொருள் இருப்பு 8000 அலகுகள் 31.03.2016 ல் முடிவடைந்த ஆண்டிற்காக உற்பத்தி செய்த அலகுகள் 100,000 அலகுகள் நிதியாண்டில் விற்பனை செய்த அலகுகள் 103,000

வேண்டப்படுவது

I) 31.03.2016 ல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்தி வருமான கூற்று (6 புள்ளிகள்)

ஆ) பீமா புடவை வியாபாரம் 01.01.2016 ல் உள்ள மீதியினை பின்வருமாறு வெளிப்படுத்தியது.

01/01/2016ல் நிதி நிலபரக் கூற்று

| விபரம் | | ரூபா "000" |
|---|---|---|
| சொத்துக்கள் | - கட்டிடம் | 300 |
| | - இருப்பு | 250 |
| | - கடன்பட்டோர் | 50 |
| | - காசு | 100 |
| | | 700 |
| உரிமையும் பொறுப்பும் | | |
| | மூலதனம் | 600 |
| | கடன்கொடுநர் | 100 |
| | | 700 |

2016 தை மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு

| இல | திகதி | கொடுக்கல் வாங்கல்கள் |
|---|---|---|
| 01 | 01.01.2016 | மீள்விற்பனை நோக்கம் கருதிய பொருட்கள் கடனுக்கு கொள்வனவு ரூபா 50,000. தளபாடம் காசுக்கு கொள்வனவு ரூபா 100,000. |
| 02 | 05.01.2016 | வங்கிக்கடன் 10% வட்டியில் பெற்றது ரூபா 100,000 |
| 03 | 07.01.2016 | பொருட்கள் பழுதடைந்து காணப்பட்டமையால் வழங்குனருக்கு திருப்பி அனுப்பப்பட்டது ரூபா 8,000 |

04 09.01.2016 வாடகை செலுத்தியது ரூபா 15,000

05 10.01.2016 ரூபா 40,000 கிரயமான பொருட்கள் விற்பனை ரூபா 75,000

06 12.01.2016 ரூபா 30,000 கிரயமான இருப்புக்கள் ரூபா 40,000 இற்கு கடனுக்கு விற்பனை

07 15.01.2016 காலாண்டுக்கான கடன்வட்டி செலுத்தியது ரூபா 6000

08 20.01.2016 கடன்பட்டோரிடம் பெற்றகாசு ரூபா 37,000 கொடுத்த கழிவு ரூபா 1,000 பதிவழித்த அறவிடமுடியாக்கடன் ரூபா 2,000

09 24.01.2016 கடன்கொடுநர் மீதி ரூபா 30,000 ஐ திர்ப்பதற்காக ரூபா 27,000 காசு செலுத்தப்பட்டது.

10 27.01.2016 கட்டிட - பெறுமானத்தேய்வு 10% ம், தளபாடம் வருடாந்த பெறுமானத் தேய்வு ரூபா 12000 ம் தேய்விடப்படும்.

**வேண்டப்படுவது**

1) மேற்தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் அதிகரிப்பாயின் (+) உடனும் குறைவாயின் (−) உடனும் பதிந்து காட்டுக.

| கொடுக்கல் வாங்கல் இல | சொத்துக்கள் | | | | பொறுப்பு | | |
|---|---|---|---|---|---|---|---|
| | நடைமுறை அல்லா சொத்து | இருப்பு | கடன்பட்டோர் | காசு | உரிமை | கடன்கொடு நர் | வங்கிக் கடன் |
| 1 | | | | | | | |
| 2 | | | | | | | |

2) நிறுவனம் கடன்பட்டோரின் 10% ஐயக்கடன் ஏற்பாடு செய்கிறது. எனின் நிதிநிலபரக் கூற்றில் காட்டப்படும் கடன்பட்டோர் மீதி (9 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

06) அ) 31.03.2016 ல் வங்கிக்கூற்றின்படி வங்கிமீதி ரூபா 45,000 செலவு மீதியினை காட்டியவாறு அத்திகதியில் காசேட்டின்படி வங்கி மீதி வேறொரு மீதியாக இருந்தது. வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு

- ✶ மார்ச் மாதம் 2016 ல் எழுதிக் கொடுக்கப்பட்ட காசோலையில் வங்கிக்கூற்றில் வரவு வைக்கப்படாத காசோலை ரூபா 10,000/=
- ✶ மார்ச் மாதம் 2016 ல் வைப்புச் செய்யப்பட்ட காசோலையும் வங்கிக்கூற்றில் செலவு வைக்கப்படாத காசோலை ரூபா 8000/=
- ✶ மார்ச் மாதம் 2016 இற்கு முன்னர் எழுதிக் கொடுக்கப்பட்ட, வைப்புச் செய்யப்பட்ட காசோலைகளில் இதுவரை வங்கிக்கூற்றில் இடம்பெறாத காசோலைகள் முறையே ரூபா 4000, ரூபா 6000/=
- ✶ நிலையியற் கட்டளை கொடுப்பனவு - காப்புறுதி 2500
- ✶ வங்கி அறவிட்ட வங்கி கட்டணம் ரூபா 1500
- ✶ கடன்பட்டோரினால் நேரடி வைப்பு ரூபா 500/=
- ✶ வைப்புச் செய்யப்பட்ட காசோலை ரூபா 6500/= வங்கியால் மறுக்கப்பட்டது. காசோலையில் பதியப்படவில்லை

**வேண்டப்படுவது**

I) திருத்திய காசேடு

II) வங்கி இணக்கக்கூற்று (6 புள்ளிகள்)

ஆ) 31.03.2016 ஆதனம் பொறி மற்றும் உபகரணம் தொடர்பான தகவல்கள் மாதுளா கம்பனியில் இருந்து எடுக்கப்பட்டது.

| விபரம் | கிரயம் ரூபா "000" | கொள்வனத் திகதி | ஆயுட்காலம் வருடம் | எஞ்சிய பெறுமதி ரூபா "000" |
|---|---|---|---|---|
| கட்டிடம் | 8000 | 01.04.2012 | 20 | 1000 |
| இயந்திரம் | 4000 | 01.07.2014 | 10 | 500 |
| உபகரணம் | 5000 | 01.04.2015 | 5 | 1000 |

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் 31.03.2016 ல் முடிவடையும் நிதியாண்டுக்குரியதாகும்.

1) 01.04.2015 ல் இயந்திரத்திற்கு 1000,000 செலவில் புதுப்பித்தல் வேலை மேற்கொள்ளப்பட்டது. இக்கட்டிடத்தின் ஆயுட்காலம் தொடர்ந்து 10 வருடங்கள் எனவும் எஞ்சிய பெறுமதி ரூபா 1000,000 எனவும் மதிப்பிடப்பட்டது.

2) 01.10.2015 ல் உபகரணம் பகுதி மாற்றீடாக கொடுக்கப்பட்டு புதிய உபகரணம் ரூபா 5500,000 இற்கு பெறப்பட்டது. மிகுதி காசாக ரூபா 2000,000 செலுத்தப்பட்டது. இவ் உபகரணத்தின் ஆயுட்காலம் 8 வருடங்கள் எஞ்சிய பெறுமதி 400,000

**வேண்டப்படுவது**

I) 31.03.2016 ல் வருமானக்கூற்றில் பதிவு செய்யப்படும் உருப்படிகள்

II) ஆதனம் பொறி மற்றும் உபகரண அசைவு கூற்று

(9 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

07) அ) மனோஜ் கம்பனியின் கடன்பட்டோர் தொடர்பான தகவல்கள் 31.03.2016 ல் பின்வருமாறு

| பெயர் | 01.03.2016ல் மீதி | கடன் விற்பனை | காசு | அறவிட முடியாக் கடன் | உட்திருப்பம் | அனுமதித்த கழிவு |
|---|---|---|---|---|---|---|
| ஆரனி | 10,000 | 100,000 | 50,000 | 1,000 | 5,000 | 500 |
| சரனியா | (5,000) | 125,000 | 60,000 | – | – | 500 |
| அகல்யா | 40,000 | 110,000 | 30,000 | 1,000 | 1,000 | – |
| சாமந்தி | – | 70,000 | 40,000 | 1,000 | – | 1,000 |
| | 45,000 | 405,000 | 180,000 | 3,000 | 10,000 | 2,000 |

**மேலதிக தகவல்கள்**

- ✶ 31.03.2016 ல் கணிப்பிடப்பட்ட தேறியலாபம் ரூபா 500,000/=
- ✶ 01.03.2016 ல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு மீதி பட்டியல் மீதியுடன் இணங்கிக் காணப்பட்டது. ஆனால் 31.03.2016 ல் இரண்டும் வேறுபட்டுக் காணப்பட்டது.

பின்வரும் வழுக்கள் இனம் காணப்பட்டது.

1) விற்பனை நாளேட்டில் சரனியாவுக்கான விற்பனை இடம்பெறவில்லை
2) சாமந்தியிடம் பெறமுடியாத தொகை ரூபா 2000 அவரது கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.
3) அனுமதித்த கழிவு ரூபா 1000 குறைவாக கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்பட்டிருந்தது.
4) ஆரனியிடம் பெற்ற காசு 10,000 சரனியா கணக்கில் பதியப்பட்டது.
5) அகல்யாவின் மீது பட்டியல் மீதியில் விடப்பட்டிருந்தது.

The National e-learning Portal for The General Education

**வேண்டப்படுவது**

1. 2016 மார்ச் மாதத்திற்கான திருத்த முன்னுள்ள கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு
2. 2016 மார்ச் மாதத்திற்கான திருத்திய கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு
3. திருத்திய கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியினை கடன்பட்டோர் பட்டியல் மீதியுடன் இணைக்கும் கூற்று
4. 31.03.2016 ல் சீராக்கிய லாப கூற்று

(6 புள்ளிகள்)

ஆ) ரவி நிறுவனத்தின் 31.03.2016 ல் பரீட்சை மீதி தயாரித்த போது இணங்கவில்லை. தொடர்ந்து நிதிக்கூற்றுக்களும் தயாரிக்கப்பட்டு ஆண்டுக்கான லாபம் ரூபா 150,000 என மதிப்பிடப்பட்டது. கணக்கறிக்கைகளை ஆய்வு செய்து இவ்வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

1) சரனுக்கு விற்பனை ரூபா 4000 விற்பனை தினசேரியில் பதிவு செய்யப்படவில்லை.
2) காப்புறுதி செலுத்தியது 5000 பெற்ற வாடகைக் கணக்கில் 500 என செலவில் பதியப்பட்டது.
3) குத்தகை தவணைக்கட்டணம் 5000 (வட்டி 500 உள்ளடங்கலாக) வட்டிக் கணக்கில் 2500 என வரவிலும், காசுக் கணக்கில் சரியாகவும் மாத்திரம் பதியப்பட்டது.
4) கொள்வனவு நாளேடு ரூபா 15000 ல் குறைவாக கூட்டப்பட்டது.
5) உட்திரும்பல் நாளேட்டில் கூட்டுத் தொகை ரூபா 8000/= வெளித்திரும்பல் கணக்கில் செலவில் வைக்கப்பட்டது.
6) கடன்பட்டோரிடம் பெற்ற காசோலை ரூபா 11000/= விற்பனைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டது.

**வேண்டப்படுவது**

I) மேற்கூறப்பட்ட வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்பேடு

II) லாப சீராகக்கூற்று

(6 புள்ளிகள்)

இ) கனி விளையாட்டுக் கழகத்தில் 50 அங்கத்தவர்களும் மாதாந்த அங்கத்துவக் கட்டணம் ரூபா 100. 2016 தைமாதம் தொடர்பான தகவல்கள் 01.01.2016 ல் 5 பேர் மாதாந்த சந்தா செலுத்த தவறியிருந்தனர்.

01.01.2016 ல் தை மாதத்திற்கான சந்தாவினை 3 பேர் செலுத்தியிருந்தனர். 2016 தை மாதத்தில் 20 அங்கத்தவர்கள் செலுத்தியிருந்தார். இவர்களில் 3 பேர் டிசம்பர் மாதத்திற்கும் தை மாதத்திற்குமான சந்தாவினையும், 7 பேர் தை, மாசி மாதங்களுக்கான சந்தாவையும் மிகுதி 10 பேர் தை மாதத்திற்கான சந்தாவை மாத்திரம் செலுத்தியிருந்தனர்.

**வேண்டப்படுவது**

I) தை மாதத்திற்கான சந்தாக் கணக்கு

(3 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)